<u>சுருக்கம்</u>

உயர்கல்வித் துறை – கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தரத்தினை ஆய்வு செய்ய மாநில தர நிர்ணயக் குழு (State Level Accreditation Council ) அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி.1)துறை

அரசு ஆணை (நிலை) எண்.132 சித்திரை 12,
சர்வஜித்,

திருவள்ளுவர்
ஆண்டு 2039, நாள்: 24.4.2008.

படிக்கப்பட்டது:

கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித எண்.18755/ ஜே1 / 2007, நாள்1.8. 2007.

-----

ஆணை:

2007–2008–ம் ஆண்டு உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கையை தாக்கல் செய்தபோது மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் அவர்கள் முன்னாள் துணைவேந்தர் ஒருவரின் தலைமையின்கீழ் தமிழகத்தில் மாநில அளவில் தர நிர்ணயக் குழு அமைக்கப்பட்டு, அக்குழு இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை கல்லூரிகளின் தரத்தினை ஆய்வு செய்யும் என அறிவிப்பு செய்துள்ளார்.

2. மேற்கண்ட அறிவிப்பினை தொடர்ந்து, கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாநில தரநிர்ணயக் குழு அமைப்பது தொடர்பாக உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆராய்ந்து, மாநில தரநிர்ணயக்குழுவை கீழ்கண்ட தலைவர் / உறுப்பினர்களை கொண்டு அமைக்க ஆணையிடுகிறது;

| | | |
|---|---|---|
| 1) திரு S.P.தியாகராஜன்,<br>முன்னாள் துணைவேந்தர்,<br>சென்னைப்பல்கலைக்கழகம். | : | தலைவர் |
| 2) பேராசிரியர் இளங்கோ,<br>பொருளாதார பேராசிரியர் (ஓய்வு),<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம். | : | உறுப்பினர். |
| 3) பேராசிரியர் பழனிச்சாமி,<br>துணைவேந்தர்,<br>தமிழ்நாடு திறந்தநிலை<br>பல்கலைக்கழகம், சென்னை–5 | : | உறுப்பினர். |

4. மாநில தர நிர்ணயக்குழு பின்வருமாறு செயல்படும்:

i) மாநில தரநிர்ணயக்குழு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து கலை அறிவியல் கல்லூரிகளின் தரத்தினையும் ஆய்வு செய்து, தேசிய தரநிர்ணயக்குழுவின் சான்றுபெற கல்லூரிகளின் திட்டமிடலுக்கும், வளர்ச்சிக்கும் அதனை செயல்படுத்துவதற்கு உதவும்.

ii) இக்குழுவின் செலவினங்களுக்காக அனைத்து கலை மற்றும் அறிவியியல் கல்லூரிகள் கட்டாய ஆண்டு சந்தாவாக ரூ.4000/- குழுவிற்கு அளிக்க வேண்டும். குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அமர்வு ஊதியம் (Sitting fees) மட்டும் வழங்கப்படும்.

iii) மாநில தரநிர்ணயக்குழு ஆய்வுப் பணிகளின்போது சம்பந்தப்பட்ட பாடங்களின் வல்லுநர் அணிகளுடன் இணைந்து செயல்படும். அதற்காக மாநில தரநிர்ணயக்குழுவால் நிர்ணயம் செய்யப்படும் ஊதியத்தை அரசின் ஒப்புதலுடன் வல்லுநர் அணிக்கு வழங்க முடிவு செய்யலாம்.

iv) இக்குழுவிற்கு, குறைந்தபட்ச பணியாளர்களை கல்லூரிக் கல்வித் துறையிலிருந்து அயற்பணியில் நியமனம் செய்யலாம். மாநில தர நிர்ணயக் குழுவிற்கு நிரந்தர இடம் தெரிவு செய்யப்படும்வரை, இக்குழு கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்தில் செயல்படும்.

5. மாநில தரநிர்ணயக் குழுவிற்கு கல்லூரிகள் செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

“ 0202 கல்வி, போட்டி விளையாட்டுகள், கலையும் பண்பாடும் –01 பொதுக்கல்வி–103 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் – AB வரவுகள் – கல்லூரிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ளவை –04 மாநில தர நிர்ணயக்குழு தொடர்பான வரவுகள்.”
(த.தொகு.கு 0202 01103 AB 0403)

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா..எண்.25247 / Edn I / 08, நாள் 22.4.2008 பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,

அரசு செயலாளர்.

பெறுநர்,
தலைவர், உறுப்பினர்கள், மாநில தரநிர்ணயக் குழு,
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து கலை (ம) அறிவியல் கல்லூரிகள்,
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக) மாநில கணக்காயர்,சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை–5/35/9, மதுரை,
உயர்கல்வித்துறையின் அனைத்து பிரிவுகள்,
நிதி (கல்வி I) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.